# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 83 பிரசோற்பத்தி மாசி 06 ( 18 02 1992 ) செவ்வாய்


### கம்பன் விழா நிறைவு நிகழ்ச்சி

## தாக்குதல்கள் மத்தியிலும் மக்களின் இலக்கிய ஆர்வம்

கடந்த நான்கு தினங்களாக நடைபெற்ற கம்பன் விழாவின் நிறைவு நாள் நேற்று மாலை நிகழ்ச்சிகளில் பெருந்தொகையான இலக்கிய ரசிகர்கள் திரண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. நிறைவு நாள் விழாவின் சிறப்பம்சமாக நடைபெற்ற மேன் முறையீட்டு பட்டிமன்றத்தைக்காண மாணவ மாணவியர், அறிஞர்கள் பெற்றோர்கள், பிள்ளைகள் எனப் பல தரத்திலானவர்களும் நல்லூர் மேற்குவீதியில் திரண்டிருந் —04 ஆம் பக்கம் பார்க்க

# வளலாயில் அதிகாலையில் மோதல்

# வலி. கிழக்கில் விமான குண்டுவீச்சு

## படையினரின் தொண்டமனாறு நோக்கி முன்னேறும் முயற்சி முறியடிப்பு!

நேற்றுக்காலை வளலாய் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் நடைபெற்ற அதேசமயம், விமானப்படை விமானங்கள் அச்சுவேலி, தொண்டமனாறு பகுதியில் குண்டு வீச்சு தாக்குதல்களை மேற்கொண்டன.

வளலாய்ப்பகுதி இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை நடத்தியவாறு தொண்டமனாறு பக்கமாக முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

அதிகாலை 5 மணிமுதல் காலை 9,30 மணிவரை மோதல்கள் நீடித்தன.

புலிகள் மேற்கொண்டகடும் தாக்குதலை தொடர்ந்து படையினர் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டனர்,

தொடர்ந்து காலை 10.30 மணியளவில் வளலாய்ப் பகுதிக்கு வந்த விமானங்கள் —04 ஆம் பக்கம் பார்க்க

### 4 முதலமைச்சர்கள் கலந்துகொண்ட

## புதுடில்லி காவிரி மாநாடு ஜெயலலிதா ஏமாற்றம்

காவிரி ஆற்றுநீர் பங்கீடு தொடர்பாக புதுடில்லியில் பிரதமர் முன்னிலையில் நடைபெற்ற நான்கு மாநிலங்களின் முதலமைச்சர்களின் மாநாடு நடைபெற்றது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, கர்நாடக முதலமைச்சர் பங்கரப்பா, கேரள முதல்வர் கருணாகரன், பாண்டிச்சேரி முதல்வர் வைத்தியலிங்கம் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்

மாநாட்டின் இறுதியில் இவர்கள் இணைந்து விடுத்த அறிக்கை ஒன்றில் மக்கள் நலன்கருதி காவிரி பிரச்சினையை சமரஸமாக தீர்ப்பதாக முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் இம்மாநாடு குறித்து தமிழக முதலமைச்சர் ஏமாற்றம் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் காவிரி நீர் தொடர்பான பேச்சுகள் நடைபெறும் என தாம் எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். இப்பிரச்சினையை உயர் நீதிமன்றத்திற்கு மீண்டும் கொண்டு செல்ல தமிழகம் ஆலோசிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்,

ஆனால் கர்நாடக முதல்வர் ...04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவிலும் குண்டு வீச்சு இடம்பெயர்ந்த இருவர் பலி!

வவுனியாவிலும் நேற்றுக் காலை விமானக் குண்டுவீச்சு நடைபெற்றுள்ளது வவுனியா விளக்குவைத்தகுளம் என்ற பகுதியில் நடைபெற்ற குண்டு வீச்சில் இரு பெண்கள் பலியாகினர்.

மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் வசித்து வந்த பெண்களே பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது

முன்னதாக நேற்று முன் தினம் மாலையும் வவுனியா மகிழங்குளம் பகுதியில் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இத்தாக்குதலில் இரு வீடுகள் சேதமாகின சில கால்நடைகளும் பலியாகின.

## யாழ் குடாநாட்டில் ஊரடங்கு நீக்கம்

யாழ் குடாநாட்டில் கடந்த சனிக்கிழமைகாலை 6மணிக்கு அமுலான ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6மணிக்கு நீக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு அறிவித்தது.

72 மணித்தியாலங்கள் அமுலான இந்த ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்படலாம் என சில ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன.

## படையினரின் சன்னம் யாழ். ஆஸ்பத்திரியில் வீழ்ந்தது

நேற்று முன்தினம் அதிகாலை மண்டைதீவிலிருந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது வெளியேறிய சன்னம் ஒன்று யாழ் மருத்துவமனை சத்திர சிகிச்சை நிலையத்திலும் — 04 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர்,பலாலியிலிருந்து பகல், இரவு ஷெல் தாக்குதல்

காரைநகர் பகுதியில் உள்ள படையினர் நேற்று முன்தினம் இரவு பொன்னாலை, திருவடிநிலை பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை பலாலி முகா ...04 ஆம் பக்கம்பார்க்க

## விடைத்தாள்கள் நேற்று கப்பலில் கொழும்பு சென்றன

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அமைய எழுதுவினைஞர்களுக்கான பரீட்சை விடைத்தாள்கள் நேற்று கப்பல்மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டன

இப்பரீட்சை முடிவுகள் மூன்று வாரங்களில் வெளிவர நடவடிக்கை எடுக்கப்படுவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

யாழ் கல்விப்பணிப்பாளர் —04 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு ஷெல் தாக்கு

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்தும் நேற்று படையினர் பலத்த ஷெல் தாக்குதல் நடத்தினர். சேத விவரம் தெரியவரவில்லை,

## வீரச்சாவு

வளலாயில் நேற்று படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் சுரேஷ் (அ ஜெயசீலன். இன்பருட்டி) வீரச்சாவு எய்தினார்

— 04 ஆம்பக்கம் பார்க்க

### லலித் அத்துலத் முதலி, காமினி திஸ்ஸநாயக்க ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டி

## இனப்பிரச்சினைக்கு தீர்வு அதிகார பரவலாக்கலே - லலித்

"விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்தியாவும் ஸ்ரீலங்காவும் இணைந்து நடவடிக்கை எடுப்பதை பாராட்டுகிறேன் இதை நாம் பத்து ஆண்டுகளுக்கு முன் வலியுறுத்தியிருந்தோம்" இவ்வாறு லலித் அத்துலத் முதலி ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

### அதிகார பரவலாக்கல்

சமஷ்டி அமைப்பு இலங்கைபிரச்சினைக்குத்தீர்வாகும் என இந்திய தூதுவர் ஜா கூறியுள்ளாரே? இது குறித்து இப்போது கருத்து கூற விரும்பவில்லை அதிகார பரவலாக்கல்முறையை நாம் கருத்தில் கொள்கிறோம்என்றார்லலித்

### தலைமைப் போட்டி இல்லை

புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கட்சியில் தலைமைப் பதவிக்கு உங்களுக்கும் காமினிதிஸ்ஸநாயக்காவுக்கும் இடையில் போட்டி நிலவுகிறதாமே? "எமக்கிடையில் எந்த போட்டியும் இல்லை இது அரச பத்திரிகைகள் வெளியிட்ட கதை நாம் தனிநபர் தலைமை ஆட்சிமுறையை எதிர்ப்பவர்கள் தனிநபர் அதிகாரம் எப்படிப்பட்டது என்பதை உணர்ந்துள்ளோம் எமக்கிடையே சமநிலையுடைய ...04 ஆம் [பக்கம்] பார்க்க

## மகாவலி சிங்களக் குடியேற்றத்தினால் எந்தப்பாதிப்பும் இல்லை - காமினி

"இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகாரபரவலாக்கல் குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது முதன் முறையாக இலங்கையில் முன்வைக்கப்பட்டுள்ள சமரஸதீர்வுக்கான திட்டமிது" இவ்வாறு காமினி திஸ்ஸநாயக்க ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

### அதிகாரப்பரவலாக்கம்

உங்களது புதியகட்சி எவ்வாறு தமிழர்களுக்கு அதிகாரப்பரவலாக்கலை வழங்கும்? "அதிகார பரவலாக்கல் தமிழருக்கு மட்டுமல்ல அது சிங்களவர், முஸ்லிம்களுக்கும் பொருந்தும்" என்றார் காமினி.

### மகாவலி குடியேற்றம்

மகாவலித்திட்டம் என்றுகூறி திருகோணமலையில் சிங்களக்குடியேற்றம் நடத்தப்படுவதாக தமிழர் தரப்பில் குற்றம் சா[ட்டப்படு]கிறதே?" இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் அப்பகுதியில் [...] சனத்தொகை அடிப்படையில், தொகையில் குடியேற்றம் [...]ம் என தெளிவு[படுத்தப்பட்டு]ள்ளது. ...0[4 ஆம் பக்கம் ப]ார்க்க

# டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் பல அரச படைகளிடமிருந்து புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன

## பிரதித் தலைவர் மகேந்திரராஜா தகவல்

கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து விடுதலைப்புலிகளின் போராட்டத்தில் இராணுவ ரீதியில் பெரும் திருப்பம் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

'இலங்கை அரசு அதன் படை பலத்தைப் பாவித்து போராட்டத்தைமேற்கொண்டால் நாமும் எமது தந்திரோபாயங்களை மாற்றுவோம்'

'சமீப காலமாக அரச படைகளுக்குப் போரில் கடும் சேதம் ஏற்பட்டு வருவதை அரசு அதன் பிரசாரத்தால் மூடிமறைத்து வருகிறது. அவர்களிடமிருந்து பெருந் தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளோம்'.

'நாம் எடுத்துள்ள ஆயுதங்களில் பல டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களும் அடங்கியுள்ளன' என திரு. மகேந்திரராஜா கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## தமிழீழ நீதிமன்றுகள் விரைவில் யாழ்ப்பாணத்தில் இயங்கும்

சட்டத் துறையில் தகைமை பெற்றவர்கள் இடம்பெறும் நீதிமன்றங்கள் விரைவில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப் படவுள்ளதாகத் தமிழீழ காவற்துறையின் பொறுப்பாளர் நடேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காவற்துறைக்குச் சேர்க்கப்பட்டுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பாடசாலைகளுக்குச் சென்று வீதி ஒழுங்கு, நல்லொழுக்கம் போன்ற விடயங்களில் விரிவுரைகளை நடாத்த ஆரம்பித்துள்ளதாகவும் திரு. நடேசன் கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## 18மாதம் தடுத்துவைக்கப்பட்டவருக்கு மன்று கலையும்வரை தண்டனை

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட 17 வயது ஏறாவூர் வாலிபன் 18 மாதகால விளக்கமறியலின் பின் நீதிமன்றம் கலையும்வரையிலான தண்டனையுடன் வியாழனன்று விடுதலையானார்.

காளிகுட்டி சஷிகுமார் (சசி) என்ற இந்த நபர் மீது விடுதலைப் புலிகளின் நடமாட்டம் பற்றி பொலிஸாருக்கு தகவல் கொடுக்கத் தவறியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

## பொது எழுதுவினைஞர்களின் சம்பளத்திட்டத்தில் மாற்றம்!

அரசாங்க பொது எழுதுவினைஞர்களின் சம்பளத்திட்டத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது எழுதுவினைஞர்கள் சேவையில் அதியுயர் வகுப்புகளில் உள்ளோரின் சம்பளத் திட்டத்திலேயே திருத்தம் செய்யப்படவுள்ளது.

திருத்தப்பட்ட சம்பளத் திட்டம் பற்றி விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

## திருநெல்வேலி விவசாயபயிலுநர்க்கு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை!

திருநெல்வேலி அரசினர் விவசாயப் பண்ணையில் பயிற்சி பெறும் யுவதிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குவதற்கு யாழ் மாவட்ட விவசாய உதவிப்பணிப்பாளர் கே. குணரட்ணம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப்பயிற்சியைப் பெறுபவர்களுக்கு தற்பொழுது இக் கொடுப்பனவு வழங்கபபடுவதில்லையெனவும் தெரியவருகிறது.

தற்போதைய சூழ்நிலையில் பயிற்சியாளர்களுக்கு இப் பணம் வழங்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி வடகிழக்கு மகாண விவசாய திணைக்களத்திடம் அதற்கான அனுமதியை அவர் கேட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது. (06)

## கொழும்பிலுள்ள இந்திய தூதருக்கு 80 பரா துருப்பினரின் பாதுகாப்பு!

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் ஜாவிற்குப் பாதுகாப்பளிக்கும் பொறுப்பு எண்பது இந்தியவ்சேட பரா துருப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்பது பரா துருப்பினரும் இந்திய- திபெத் எல்லைப் படையைச் சேர்ந்தவர்கள்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் மீதும், இந்திய நிறுவனங்களின் மீதும் பழிவாங்கும் விதத்திலான தாக்குதல்கள் இடம்பெறலாமென்ற அச்சத்திலேயே இந்த விசேட பாதுகாப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாம்.

## ஊரியான் பாதையை இராணுவம் தடுக்குமாம்

கடந்த சனிக்கிழமை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப் பட்டதன் பின்னர் நேற்றுமுன் தினம் வரை யாழ் குடாவில் பாரிய தாக்குதல் எதுவும் நடாத்தப்படவில்லை என இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் யாழ் குடாவுக்கும் ஏனைய பகுதிகளுக்குமிடையேயான ஒரேயொரு போக்குவரத்துப் பாதையாக உள்ள ஊரியான் வழியை மூடிவிட இராணுவம் முயற்சிப்பதாகவும், ஆனையிறவு வழியாக பயணத்தை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## 1000 பட்டதாரிகளுக்கு மே மாதம் ஆசிரிய நியமனம்!

புதிதாக ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் எதிர்வரும் மே மாதத்தில் வழங்கப்படவுள்ளதாக கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

சுமார் 9 ஆயிரம் விண்ணப்பங்கள் இந்த பட்டதாரி ஆசிரிய நியமனத்துக்குக் கிடைத்துள்ளதாகவும் இவர்களில் 1000 பேரைத் தெரிவு செய்வதற்கான இறுதிப் பரீட்சை இம் மாதம் நடைபெறுமெனவும் கல்விச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

விஞ்ஞான, கணித, வர்த்தக, கணக்கியற்துறை சார்ந்த பட்டதாரிகளுக்கே ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

## 'கல்விக்கதிர்' சஞ்சிகையை மாணவரிடையே பரப்ப நடவடிக்கை

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினரால் வாரத்துக்கொரு முறை வெளியிடப்படும் 'கல்விக் கதிர்' சஞ்சிகையின் மீது பாடசாலை மாணவர்களுடைய கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் இதன் உறுப்பினர்களாக ஆசிரியர்களையும் மாணவர்களையும் சேர்க்க யாழ் கல்வித்திணைக்கள முறைசாராப் பிரிவு கல்விப் பணிப்பாளர் எம். சுப்பிரமணியம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இதற்கான அதிபர்களது ஆலோசனைகளை உடனடியாக தமக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கோரியுள்ளார்.

மேலும் இச் சஞ்சிகையில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கு பயன்படக் கூடிய பல விடயங்கள் இடம்பெற உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (15)

## 'மக்களால் ஒதுக்கப்பட்டோர் ஆயுதத்தால்ஆட்சியை பிடிக்கமுயற்சி'

மக்களால் ஒதுக்கப்பட்டோர் ஆயுதபலத்தினால் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சியெடுக்கின்றனர் என ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்

நேற்றுமுன்தினம் கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இப்படித் தெரிவித்துள்ளார்.

'பயங்கரவாதம் முற்றாகத் தோல்வி கண்டுவிட்டதாக நாம் நினைக்கக்கூடாது வாக்குப்பலத்தினால்தோல்வி கண்டோர் துப்பாக்கி வேட்டினால் மீண்டும் தலைதூக்க முயலலாம்'

'என் சாதகநிலைஇப்போது சரியில்லை என சிலர் கூறுகின்றனர். மார்ச் மாதத்துடன் நான் சரியாகி விடுவேன் என்றெல்லாம் எனக்கு சாதகக் கணக்குக் கூறுவோரும் பலருள்ளனர் நான் நோய்வாய்ப் படலாம், சில வேளை சுட்டுக் கொல்லப்படவும் கூடும்- என் பலன் அப்படியிருக்கலாம்- அதற்காக [illegible] பயப்படவில்லை [illegible]க்கடி வந்தாலும் [illegible]பிடிக்கும் அரசிய[illegible]லிருந்து பின்வாங்க மாட்டேன்' எனவும் அங்கு ஜனாதிபதி பிரேமதாசா மேலும் கூறினார்.

### யோகாசன செய்முறைப் பயிற்சி

குடாநாட்டில் பலரைப் பீடித்திருக்கும் இருதய நோய், இருதயக் கோளாறு சம்பந்தமாகக் கருத்தரங்கு ஒன்று அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் சார்பில், இம் மாதம் 23ஆந்திகதிஞாயிற்றுக்கிழமை பி பகல் 3 30 மணிக்கு யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இருதய நோயையும், இருதயக் கோளாறையும், யோகாசனப் பயிற்சி மூலம் குணப்படுத்தும் யோகாசன செய்முறைகளையும், அந்நோயைத் தடுக்கும் யோகாசனப் பயிற்சிகளையும் பற்றி பல யோகாசன நிபுணர்களும், யோகாசனக் கலாநிதி ஸ்ரீ சுவாமி சிதானந்த சரஸ்வதி அவர்களும், இக் கருத்தரங்கில் பங்குபற்றி உரையாற்றவுள்ளார்கள். இக் கருத்தரங்கில், யோகாசன செய்முறைகளும் செய்து காண்பிக்கப்படும்

## 'மத்திய கிழக்கு வன்செயலால் அமைதிப்பேச்சுக்கு அச்சுறுத்தல்'

மத்திய கிழக்கு நாடுகளில் சமீபத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் எதிர்வரும் 24ஆம் திகதி மீண்டும் நடைபெறவுள்ள மத்திய கிழக்கு அமைதிப் பேச்சைக் குழப்பக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிலும், லெபனானிலும் ஏற்பட்ட இந்த வன்செயல்களினால் பலர் பலியாக நேரிட்டதுகுறித்து அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.


### மலிவு விற்பனை
### "ராகுலசூரியன்ஸ்"

சிவன் கோவிலடி, பருத்தித்துறை.

எங்கள் நிறுவனத்தின் கையிருப்பைக் குறைப்பதற்காக கையிருப்பில் உள்ள சகல பிடவைகளையும் மிகவும் சகாயமான விலையில் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்ய விரும்புகிறோம்.

இச் சந்தர்ப்பத்தை எமது வாடிக்கையாளர் அனைவரும் பயன்படுத்தி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அறிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்
ராகுலசூரியன்ஸ்

பிரதான வீதி.
சிவன் கோவிலடி,
பருத்தித்துறை.

02028

# மொனராகல மாவட்ட வீதிகளில்

# பதுங்குகுழிகள், தடைகள் அமைப்பு!

மொனராகல மாவட்டத்தில் கிராமம் தோறும் வீதித் தடைகளும், பதுங்கு குழிகளும் அமைக்கப்படவுள்ளதாக மொனராகல பொலிஸ் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

கிழக்கிலிருந்து பிபில, மஹியங்கனைப் பகுதிகளினூடாக ஊவாப் பகுதிகளுக்குள்ளும் ஏனைய தோட்டப் பகுதிகளுக்குள்ளும் விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காகவே முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கையெடுக்கப்படுவதாக மொனராகல பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்ததாக கொழும்பிலிருந்து வெளிவரும் 'லங்காதீப' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## அரச ஊழியர்களுக்கான வாகன இறக்குமதிச் சலுகை இரத்து!

சலுகை நியதிகளின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிருவாக மாகாண சபைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 12-12-1991 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையே இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## அமத்துல்லாகான் மீது ஆறு கொலைக் குற்றச்சாட்டுக்கள்!

எல்லை மீறல் போராட்டத்தை ஆரம்பித்துள்ள பாக். பிரிவு காஷ்மீர் தீவிரவாத அணியின் தலைவர் அமத்துல்லாகான் மீது ஆறு கொலைக் குற்றச்சாட்டுகள் இந்திய அரசினால் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த கொலைக்குற்றச்சாட்டுகளின் மீது கான் தற்பொழுது தேடப்பட்டுவருவதாகவும் இந்திய அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

எல்லையைக்கடந்து அமதுல்லா கான் இந்தியாவுக்குள் வருவாராயின் அவரைக் கைது செய்வதற்கு அது வசதியாகவே இருக்குமென இந்தியமத்தியபாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

## சைவப் புலவர் பரீட்சை

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தாரால் நடாத்தபடும் இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகள் 21-2-92 முதல் 23-2-92வரை வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் அறிவித்துள்ளது. 18

## கல்விப் பகுதி வெற்றி பெற்றது

கிளிநொச்சி கல்வித் திணைக்களத்திற்கும், கிளிநொச்சி செயலகத்திற்குமிடையில் சிநேகபூர்வ 20 ஓவர் மென்பந்துகிரிக்கெட் போட்டி ஒன்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இப் போட்டியில் கல்வித் திணைக்கள அணி வெற்றி பெற்றது.

கல்வித் திணைக்கள அணி சிரேஷ்ட உத்தியோகத்தர் திரு. க. பாக்கியநாதன் தலைமையிலும், செயலக அணி புனர்வாழ்வு நிர்வாக உத்தியோகத்தர் தலைமையிலும் ஆட்டத்தில் கலந்து கொண்டது. (17)

## பாராளுமன்ற தெரிவுக்குழுமுன் இ.தொ.கா. சாட்சியமளித்தது!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடந்த வியாழக்கிழமை சாட்சியமளித்தது.

இ.தொ.கா. வினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகளுக்கான விளக்கங்கள் அன்றைய தினம் தெரிவுக்குழு அங்கத்தவர்களுக்கு எடுத்து விளக்கப்பட்டது.

## நிறைவேற்றுக் கல்வி அதிகாரியின் கீழ்

# புதிய கல்வி வலயங்கள் அமைப்பு!

யாழ் கல்விமாவட்டத்தில் கொத்தணி முறை மாற்றப்பட்டு கல்வி வலய முறை ஏற்படுத்தப்படவுள்ளது. இதன்படி அமையவுள்ள 22 கல்வி வலயங்களும் முன்மொழிவாக யாழ் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு யாழ்ப்பாணக் கோட்டத்தில், யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணைக் கொத்தணிகள், இணைக்கப்பட்டு யாழ்ப்பாண வலயமாகவும், கொக்குவில், கோண்டாவில் கொத்தணிகள் இணைக்கப்பட்டு கொக்குவில் வலயமாகவும், நல்லூர், வண்ணார்பண்ணை வடக்கு கொத்தணிகள் இணைக்கப்பட்டு நல்லூர் வலயமாகவும் மூன்று வலயங்கள் அமையவுள்ளன.

மருதனாமடக் கோட்டத்தில் உடுவில், ஏழாலை, சுன்னாக கொத்தணியிலுள்ள ஆறு பாடசாலைகள் இணைக்கப்பட்டு உடுவில் வலயமாகவும், மானிப்பாய், நவாலி, சுன்னாகத்தின் ஏனைய மூன்று பாடசாலைகள் இணைக்கப்பட்டு மானிப்பாய் கொத்தணியாகவும், அச்சுவேலி, புத்தூர் கொத்தணிகள் அச்சுவேலி வலயமாகவும், கோப்பாய், நீர்வேலிக் கொத்தணிகள் இணைக்கப்பட்டு கோப்பாய் வலயமாகவும், உரும்பிராய், வயாவிழான் கொத்தணிகள் இணைக்கப்பட்டு உரும்பிராய் வலயமாகவும், ஐந்து வலயங்கள் அமையவுள்ளன.

பண்டத்தரிப்புக் கோட்டத்தில் அளவெட்டி. இளவாலை. பண்டத்தரிப்பு கொத்தணிகள் பண்டத்தரிப்பு வலயமாகவும், காரைநகர், சுழிபுரம், வட்டுக்கோட்டைக் கொத்தணிகள் வட்டுக்கோட்டை வலயமாகவும், மல்லாகம், அம்பனை, தெல்லிப்பழை, காங்கேசன்துறை கொத்தணிகள் மல்லாக வலயமாகவும் மூன்று வலயங்களாக அமையவுள்ளன.

வடமராட்சிக் கோட்டத்தில் நாகர் கோவில், உடுத்துறைக் கொத்தணிகள் வடமராட்சி கிழக்கு வலயமாகவும் பருத்தித்துறை. புலோலி கொத்தணிகள் பருத்தித்துறை வலயமாகவும், கரவெட்டி, நெல்லியடி கொத்தணிகள் கரவெட்டி வலயமாகவும், உடுப்பிட்டி, வல்வெட்டித்துறைக் கொத்தணிகள் உடுப்பிட்டி வலயமாகவும் இயங்கவுள்ளன.

தென்மராட்சிக் கோட்டத்தில் சாவகச்சேரி நகர், சாவகச்சேரி வடக்கு கொத்தணிகள் சாவகச்சேரி வலயமாகவும், கைதடி, மட்டுவில் கொத்தணிகள் கைதடி வலயமாகவும், கொடிகாமம், உசனில் ஐந்து பாடசாலைகள் கொடிகாமம் வலயமாகவும், வரணி, மற்றும் உசனின் மிகுதி ஐந்து பாடசாலைகள் வரணிக் கொத்தணியாகவும் செயற்படவுள்ளன வேலணைக் கோட்டத்தில் வேலணை, மண்டைதீவுக் கொத்தணிகள் வேலணை வலயமாகவும், புங்குடுதீவு, ஊர்காவற்றுறை கொத்தணிகள் புங்குடுதீவு வலயமாகவும், நயினதீவு, நெடுந்தீவு கொத்தணிகள் நயினாதீவு வலயமாகவும் செயற்படமுன்மொழியப்பட்டுள்ளது. (20)

## 3 வருட தண்டனைக்கு எதிராக எர்ஷாட் மேன்முறையீடு!

பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாட் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் தனக்கு விதிக்கப்பட்ட 3 வருடச் சிறைத் தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளார்.

விசேட நீதிமன்றம் இத்தண்டனையை வழங்கியிருந்தது

9 வருட ஆட்சிக்காலத்தில் தவறான முறையில் 6 லட்சம் டொலர்களைப் பெற்றுக்கொண்ட குற்றச் சாட்டின் பேரில் இம்மாதம் 3 ஆம் திகதி அவருக்கு 3 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

## சிங்கப்பூர் விபத்தில் மலேசிய, யப்பான், கொரிய பிரஜைகள் பலி!

சிங்கப்பூர் துறைமுகப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட விபத்து ஒன்றில் ஐவர் கொல்லப்பட்டனர், 16 பேர் படுகாயமுற்றனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் மட்டுமே சி[illegible] பிரஜைஏனையோர்கொரியா, யப்பான், மலேசியா நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

இரசாயனப் பொருள்கள் ஏற்றப்பட்ட பவுஸர் வண்டி ஒன்று வெடித்தபோதே இவ் விபத்து ஏற்பட்டது.

---

அரசியல் அவதானிப்புகள்:

## சிறிலங்கா அரசியலில் பௌத்தமத வெறி;

- எஸ். ஜி. எம்.

சிங்கள மக்களின் வரலாற்றில் ஒரு அம்சம் மகா வம்சத்தில் கூறப்பட்டபடி தமிழர் எதிர்ப்பையும், வெறுப்பையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

சிங்கள மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும் சரி, நாடு சுதந்திரம் பெற்ற பின்பும் சரி பௌத்த மத பீடங்களின் ஆதிக்கம் பலமாகவே இருந்திருக்கிறது.

1956 இல் தனிச்சிங்களக் கொள்கையை முன் வைத்து ஆட்சிக்கு வந்த எஸ் டபிள்யூ ஆர் டி.பண்டார நாயக்க பௌத்த மத பீடத்தின் ஆதரவுடனேயே பதவிக்கு வந்தார் பௌத்த பிக்குவான புத்தரகித்த உட்பட்ட சிலரின் கொலைத் திட்டத்தின்படி இன்னுமொரு பௌத்த பிக்குவான சோமராமவினால் அவரே படுகொலை செய்யப்பட்டார்.

சிறிலங்கா அரசியலில் ஆக்கவும், அழிக்கவும் பௌத்த மத பீடத்தினால் முடியுமென்பதை இது காட்டியது.

தமிழர்களுக்கான உரிமைகளை மறுப்பதிலும் எதிர்ப்பதிலும் கூட பௌத்த பீடம் முன்னணியிலே நின்றுள்ளது

பண்டா-செல்வா ஒப்பந்தத்தையும்,
டட்லி-செல்வா ஒப்பந்தத்தையும்

டட்லி சேனநாயக்க அரசு 1966 ஜனவரி 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த நியாயமான தமிழ் மொழி உபயோகச் சட்டத்தின் கீழான பிரமாணங்கள் போன்ற சகலதையும் எதிர்ப்பதில் பௌத்த மத பீடம் முன்னின்றது.

இப்பொழுது தொண்டமான் சமரசத் திட்டத்தை எதிர்ப்பதிலும் பௌத்த மதபீடமே முதன்மை வகிக்கிறது.

இத் திட்டத்திற்கெதிராக முதல் குரலெழுப்பியது புத்தசாசன ஆலோசனைச் சபையே. அதன் முக்கியஸ்தர் மடிகே பஞ்ஞாசீக தேரோ ஆவர்.

இவர் இப்பொழுது மட்டுமல்ல 1979 இல் சன்சோனி கமிஷனுக்கு சமர்ப்பித்த அறிக்கையிலும் வடக்கு-கிழக்கு, தமிழர்களின் பாரம்பரிய தாயகம் அல்ல என வாதிட்டவர். 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள பாரம்பரிய தமிழர் பிரதேச சரத்தை இப்பொழுதும் மூர்க்கமாக எதிர்க்கிறார்.

ஜனவரி 17, 18 ஆம் திகதிகளில் வடபகுதி இராணுவத் தளங்களுக்கு விஜயம் செய்த றம்புக்வெல விபாசி மகாநாயக்க தேரோ "எமது மண்ணின் சட்டபூர்வமான வாரிசுகள் சிங்கள பௌத்தர்களே" எனக் கூறுகிறார்.

இவர் வடபகுதி ஆயுதப்படையினரின் தமிழர் அழிப்பு நடவடிக்கைக்கு "ஆசீர்வாதம்" வழங்கியது மட்டுமல்ல, "எமது நாட்டையும், மண்ணையும் காப்பாற்ற எமது ஆயுதப்படைகள் எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கிறது" எனத் தமது படைபற்றிக் கூறியிருக்கிறார்.

உண்மையில் அவர்கள் நாட்டைக் காப்பாற்றுகிறார்களா அல்லது தாம் தமிழ் மண்ணில் ஆக்கிரமித்துக் குடி கொண்டிருக்கும் முகாம்களை காப்பாற்றுகிறார்களா என்பதை இந்த மகாநாயக்கர் புரிந்து கொள்ளவில்லைப் போலும்.

சிறிலங்கா பௌத்த பீடத்தின் மதவெறி ஆதிக்கம் கத்தோலிக்க மதத்தினர்க்கு எதிராகவும் எப்பொழுதும் இருந்திருக்கிறது, இருக்கிறது.

எஸ் டபிள்யூ.ஆர் டி.பண்டாரநாயக்கவே ஒரு முறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜக்கிஸ் திசாநாயக்காவைப் பார்த்து நீர் ஒரு பௌத்த கொவிகம சிங்களவராகவிருந்திருந்தால் உம்மை நான் பொலிஸ் மா அதிபர் ஆக்கியிருப்பேன் எனக் கூறியிருந்தார்.

1960 களில் உதவி பெற்ற பாடசாலைகளைக் கத்தோலிக்க திருச்சபை முகாமைத்துவத்தில் இருந்து அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது இது பற்றி எழுந்த கத்தோலிக்க எதிர்ப்பைச் சமாளிக்க இராணுவபலத்தை அரசாங்கம் உபயோகித்தது 1961 இல் நடைபெற்ற தமிழர் சத்தியாக்கிரகத்தையும் இராணுவ பலத்தால் முறியடித்தது இன்னொரு விஷயம்.

அந்தக் காலத்தில் பாதுகாப்பு நிரந்தரச் செயலாளராகவிருந்த என் கியூ டயஸ் "கத்தோலிக்க நடவடிக்கை"க்கு எதிராக போர்க்கொடி தூக்கிச் செயற்பட்டார், அவருக்கு அரசாங்கத்தின் ஆதரவு முழுமையாக இருந்தது. அரசியலில் கத்தோலிக்க மத பீடத்தினர் ஈடுபடுவது புதிதானதல்ல, தென்னாபிரிக்காவின் அதிமேற்றிறாணியார் டெஸ்மண் டூடூ, சைப்பிரஸின் அதி மேற்றிறாணியார் மக்காறியோஸ் என்பவர் பற்றிக் கூறலாம்,

ஆனால் அவர்கள் எல்லாம் ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்காகவே குரல் கொடுத்திருக்கிறார்களே தவிர எந்த ஒரு சமூகத்தையும் ஒடுக்குவதை ஆதரித்துச் செயற்படவில்லை,

சிறிலங்காவில் அதிமேற்றிறாணியார் நிக்கலஸ் மார்கஸ் பெர்னாண்டோ கூட மாகாண சபைகள் தம்மைத் தாமே ஆளும் உரிமை கொண்டதாகவிருக்க வேண்டுமென அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# 'வீடியோ'படங்கள் திரையிடுவதற்கு புதிய விதிமுறைகள் அறிவிப்பு

தமிழீழத்தில் இன்று வீட்டுக்கு வீடு 'வீடியோ' படம் பார்ப்பது பெருகியுள்ளது. மக்களின் உணர்வுகளையும், அவரவர் இரசனைக்கேற்ற கலை வடிவங்களைப் பார்ப்பதையோ, ரசிப்பதையோ நாங்கள் கட்டுப்படுத்தவில்லை.

இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இன்று தொடக்கம் ஒருவர் தனது வீட்டில் நிகழும் எந்த நிகழ்வின் போதும் அல்லது விரும்பும்போதும் வீடியோப் படங்கள் திரையிடுவதற்கு எவ்வித அனுமதியும் பெற வேண்டியதில்லை.

ஆனால், எம் விடுதலைப் போரின் பெறுமானத்தையும், புனிதத்தையும் புரிந்து கொண்டு மூன்றாம் தரத் திரைபடங்களைத் திரையிட்டு மக்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லாதிருக்கும்படி எம்மக்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நிதியுதவிக் காட்சியாகத் திரையிடப்படும் திரைப்படங்களுக்கான அனுமதியை மட்டும் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக பிரிவுச் செயலகங்களிலும், மாவட்டச் செயலகங்களிலும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இதுதவிர வீட்டிலோ அல்லது பொது இடங்களிலோ வருமானம் கருதி தினசரி சிறிய அரங்கம் போன்று 'வீடியோ' திரைப்படம் திரையிடுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

கூட்டாகவோ அல்லது தினசரி ஓரிடத்திலேயோ, குழுமியோ பணவருவாயை மாத்திரம் கருத்திற் கொண்டு 'வீடியோ' திரைப்படம் திரையிடுபவர் தண்டனைக்குரிய குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவதுடன் திரைப்படம் காட்டுவதற்குரிய சாதனங்களும் பறிமுதல் செய்யப்படும்.

## சாரதிகள், சைக்கிளில் செல்வோர்

# வீதி ஒழுங்குகளை மீறினால் அவ்விடத்திலேயே தண்டம்

வீதி ஒழுங்குகளை மீறும் வாகனங்களின் சாரதிகள், சைக்கிளில் செல்வோர் மீது தமிழீழ காவல்துறையினர் அவ்வவ்விடங்களிலேயே தண்டனை விதித்து வருகின்றனர்.

திருநெல்வேலி சந்தை முன்பாக அருகருகாக துவிச்சக்கர வண்டியில் கதைத்துக் கொண்டு வந்தவர்களையும், கண்டபடி வாகனத்தை ஓட்டி வந்தவர்களும் காவல்துறையினரால் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டு அவ்விடத்திலேயே அறவிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. 15

# மகிந்த ராஜபக்ஸவின் மனித உரிமை மீறல் வழக்கு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி மகிந்தராஜபக்ஸவின் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

1990ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையம் வந்த போது இவர் கைதாகி தடுத்து வைக்கப்பட்டார்.

இவரிடமிருந்து 532 காணாமற் போனோர் பற்றிய ஆவணங்களும் 30 புகைப்படங்களும் பொலிஸாரால் அன்று பறிமுதல் செய்யப்பட்டமை தெரிந்ததே.

## சுவீடன் நாளிதழ் தெரிவிக்கிறது

# போபர்ஸ் பீரங்கி விற்பனையில் ராஜீவ் காந்தி லஞ்சம் பெற்றார்

சுவீடன் நாட்டு போபர்ஸ் இராணுவத் தளபாட விற்பனை நிறுவனத்திடமிருந்து முன்னாள் இந்தியப் பிரதமர் காலஞ்சென்ற ராஜீவ்காந்தி லஞ்சம் வாங்கினார் என்ற தகவலை போபர்ஸ் நிறுவன உயர் அதிகாரி தற்போது வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு 1986 ஆம் ஆண்டு போபர்ஸ் நிறுவனத்திடமிருந்து தரமற்ற பீரங்கிகள் வாங்கியதில் ராஜீவ் காந்தி லஞ்சம் பெற்றார் என்ற தகவல் முன்னர் வெளிவந்ததும், அது தேர்தலில் அவரைத் தோற்கடிக்கவும் செய்தது.

ஹெகன்ஸ் பெயாபேர் எனும் சுவீடன் நாளிதழ் இத்தகவலை வெளியிட்டுள்ளது. போபர்ஸ் அதிகாரி தமது பெயரை வெளியிட மறுத்துள்ளார்.

ராஜீவ்காந்திக்கு அளிக்கப்பட்ட தொகையை அந்த அதிகாரி லஞ்சம் என்று நேரடியாகக் குறிப்பிடவில்லை. தரகு, அன்பளிப்பு என்ற வார்த்தைப் பிரயோகங்களையே உபயோகித்திருக்கிறார்.

இச் செய்தியை அவர் தற்போது வெளியிடுவதற்கு அரசியல் ரீதியில் ஏற்பட்ட நிர்ப்பந்தம் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

## இனப்பிரச்சினைக்கு — தலைமையே விரும்புகிறோம்'

### தேர்தல்

இன்னும் சில மாதங்களில் தேர்தல் நடைபெறலாம் என்கின்றனர் அதற்கு நீங்கள் தயாரா?

''எவரும் எப்போதும் எதற்கும் தயாராக இருப்பதில்லை காலம் செல்ல இதற்கு பதில் தெரியும்.''

### ஜனாதிபதிக்கு என்ன நடந்தது

அண்மையில் ஜனாதிபதி பிரேமதாஸ உங்களுக்கும் ஏனைய அதிருப்தியாளர்களுக்கும் இறுதியில் என்ன நடந்தது எனக் கூறியுள்ளார் இதற்கு என்ன கூறுகின்றீர்கள்?

''எமக்கு எதுவும் நடைபெறவில்லை ஆனால் ஜனாதிபதிக்கும் தான் என்ன நடந்தது என்பதை நாம் அறிய விரும்புகிறோம்.

### படப்பிடிப்பு மோசடி

அண்மையில் மொரட்டு மூல்லவில் நீங்கள் நடத்திய பொதுக்கூட்டத்தில் குறைந்த தொகையான பொது மக்களே கலந்து கொண்டதாக அரச சார்பு வெகுஜன தொடர்பு சாதனங்களில் குறிப்பிடப்பட்டதே?

''எமது கூட்டத்திற்கு பெருந்தொகையானோர்வந்திருந்தனர் ஆனால் சிறிய கூட்டமாக நின்ற ஒரு தொகுதியினரையே படம்பிடித்துள்ளனர்''

### கைதிகள் பரிமாற்றம்

அண்மையில் ஒஸி அபயகுணசேகர, புலிகளினால் கைது செய்யப்பட்ட இரு இராணுவ சிப்பாய்களை விடுவிக்க விஜேதுமாரணதுங்க முயற்சி செய்ததாகவும் ஆனால் நீங்கள் (லலித்) தலையிட்டு இரு சிப்பாய் விடுதலைக்கு பதிலாக இரு சிரேஷ்ட புலிப் போராளிகளையும் விடுவிக்க ஒப்புக்கொண்டீர்கள் என்று குற்றஞ்சாட்டியுள்ளாரே?

''இது ஐந்து வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் இதில் இப்போது ஒஸி கருத்துக் கூறுவது புதுமையாக உள்ளது. நாம் காலத்திற்கு காலம் போர் கைதிகளை பரிமாறியுள்ளோம் ஏனெனில் எமது சிப்பாய்களை நாம் மீளப் பெறுவதில் அக்கறையாக இருந்தோம். ஒஸியின் கருத்து யாரோ ஒருவரின் இசையை யாரோ ஒருவரின் கிட்டாரில் இசைப்பது போல் உள்ளது.

### மன்னிப்பு கோரவில்லை

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போது அதை பகிஷ்கரித்த நீங்கள் பின்னர் ராஜீவ் காந்தியை விருந்துபசாரத்தில் சந்தித்து பகிஷ்கரித்தமைக்கு மன்னிப்பு கோரியதாக ஒஸி கூறுகிறாரே?

''நான் யாரிடமும் மன்னிப்பு கோரவில்லை நான் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட வைபவத்தை பகிஷ்கரித்தேன் எனினும் ராஜீவ் காந்தியை நான் பலகாலமாக தனிப்பட்ட ரீதியில் அறிவேன் இதனால் அவரை பின்னர் விருந்தில் சந்தித்தேன் பகிஷ்கரித்தமைக்கான காரணத்தை அவரிடம் விளக்கினேன் அப்படிநான் அவரிடம் மன்னிப்பு கோரியிருந்தால் ராஜீவ் புறப்படும்போது அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருப்பேனே.

நான் ஏன் மன்னிப்பு கோர வேண்டும் மக்களுக்கு ஒப்பந்தம் தொடர்பான எனது நிலைப்பாடு தெரியும் என லலித் அத்துலத் முதலி பேட்டியில் குறிப்பிட்டார்

### மகாவலி —

இந் நடைமுறையினால் மாகாணத்தில் இனவிகிதாசாரத்தில் மாற்றம் ஏற்படமாட்டாது எனக்கருதுகிறேன் டி. எஸ், சேனநாயக்கா இத்தகைய குடியேற்றத்திட்டங்களை ஆரம்பிக்கும் போது வடகிழக்கில் நிலப்பிரச்சினை ஏற்படவில்லை. தெற்கிலும் மலையகத்திலும் குடியிருப்பு பிரச்சினை எழுந்தபோது இப்பகுதிமக்களை வேறு இடங்களில் கொண்டு சென்று குடியேற்ற டி,எஸ் சேனநாயக்கா முயற்சித்தார், அப்போது எந்தப்பிரச்சினையும் எழவில்லை

எனினும் சிங்களம் மட்டும் சட்டத்தினால் எழுந்த பூசல்கள் இந்த குடியேற்றங்களையும்சந்தேகம் கொள்ள வைத்துவிட்டன.

### நான் இனவாதிதான்

நீங்கள் இனவாதி என குற்றம் சாட்டுகின்றனர் பிரேமதாஸ - பாஸ்கரலிங்கம் - பிரபாகரன் அரசு இது என்று ஒருமுறை குறிப்பிட்டுள்ளீர்களே?

''உண்மை பிரபாகரன் வடகிழக்கின் முக்கியநபர் பாஸ்கரலிங்கம் பிரேமதாஸாவுக்கு பொருளாதார ஆலோசனை வழங்குபவர். எல்லோரையும் இனவாதிகள் என்றே கூற வேண்டும் எவராவது தனது இனநலனைவிடுத்து மற்றைய இனங்களின் நலனில் அக்கறை செலுத்துவரா?

தொண்டமான் தனது மலையக இந்தியரின் நலனில் அக்கறை கொள்கிறார் நான் சிங்கள இனத்திற்காகப் பேசுகிறேன் எனினும் தமிழ் முஸ்லிம் இனத்திற்காகவும் பேசுகிறேன்'' என்றார் காமினி திஸநாயக்க.

# மீனவர்கள் மீது படையினர் சூடு

அரியாலை கிழக்கு பூம்புகார் கடற்பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது நேற்று அதிகாலை பூநகரி - கல்முனையில் உள்ள இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

அத்தோடு நேற்றுக்காலை 9 மணியளவில் ஹெலி ஒன்று இப்பகுதியை வட்டமிட்டு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 47. 07

# பதவியா குடியேற்றத்துக்கு சர்வோதயம் உதவி

பதவியாவில் இருந்து விரட்டப்பட்டதாக கூறப்படும் சிங்களவர்களை மீளக் குடியமர்த்தும் வேலைகளில் சர்வோதயம் உதவி செய்துவருகிறது

சர்வோதய தொண்டர்கள் சிரமதான மூலம் வீதிகள் அமைக்கும் பணியில் ஈடுபடுகின்றனர்.

# நியூஹெமிஸ்வெயரில் முன்னோடி ஜனாதிபதித் தேர்தல்

அமெரிக்காவின் சிறிய மாநிலமான நியூஹெமிஸ்வெயரில் ஜனாதிபதி முன்னோடித் தேர்தல் இன்னும் சில தினங்களில் நடைபெறவுள்ளது.

அமெரிக்க தேர்தல் வரலாற்றில் சிறிய மாநிலமாக நியூஹெமிஸ்வெயர் இருப்பினும் இம்மாநிலத்தில் வெற்றி பெறாத எவரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது

புஷ்ஷிற்கு இம்மாநிலத்தில் 60 வீதமான வாக்காளர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதை கருத்து கணிப்புகள் மூலம் தெரியவந்துள்ளது.

# சிவாஜி கைதாகி பின் விடுதலை

ஜனதாதள கட்சித் தலைவர் எஸ். ஆர், பொம்மை, தமிழக தலைவர் சிவாஜி கணேசன் ஆகியோர் நேற்று சென்னையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அரசின் விலை உயர்வுப் போக்கை கண்டித்து இவர்கள் மறியல்போராட்டம் நடத்திய போதே கைதானார்கள் எனினும் இவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்

## கூ'ப. தலைமையகம் எச்சரிப்பு

கொழும்பு நகரில் சந்தேகத்திற்கு இடமான நபர்கள், பொதிகள், வாகனங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று எச்சரித்துள்ளது.

### வீரச்சாவு —

வவுனியாவில் நேற்று பெண் போராளிகளான மங்களா (அ தேவிகா), கலாநிதி (கு பாலமனோகரி. ஆழியவளை) வீரச்சாவு எய்தினர்.

### விடைத்தாள்கள்...

ஆர். சுந்தரலிங்கம் இவ் விடைத்தாள்களை கொழும்புக்கு எடுத்துச் சென்றார், (47 - 06)

### காரைநகர் —

மிலிருந்தும் இராணுவத்தினர் கட்டுவன், ஏழாலை, குரும்பசிட்டி, குப்பிளான் பகுதிகளை நோக்கிஷெல் தாக்குதல்களை நடத்தினர்

ஊர்காவற்றுறை மண்டைதீவு பகுதிகளிலிருந்தும் படையினர் யாழ் கடற்பிரதேசங்களை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். 47, 07

### படையினரின்...

வந்து வீழ்ந்துள்ளது.

பாதுகாபபு வலயத்தில் உள்ள யாழ் மருத்துவமனையை நோக்கி படையினர் சுட்டதாக இச்சம்பவத்தின் மூலம் தெரியவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (07, 47)

### புதுடில்லி...

பங்காரப்பா மாநாடுகுறித்து கருத்துவெளியிட்ட போது இது நல்ல ஆரம்பம் இப்படியான பேச்சுகள் தொடர வேண்டும் என்றார்,

### தாக்குதல்கள்...

தனர்.

இலக்கிய ரசனைக்கு விருந்தாக அமைந்த மேன் முறையீட்டு பட்டிமண்டபத்தைக் காண ஊரடங்குச் சட்டம், ஷெல் தாக்குதல்கள், குண்டு வீச்சுக்கள் மத்தியிலும் மக்கள் திரண்டிருந்தமை இங்கு [illegible]ப்பிடத்தக்கது.

### வளலாயில் —

வளலாய், இடைக்காட்டுபகுதியில் குண்டுகளை வீசின அச்சுவேலிப்பகுதியிலும் விமானத் தாக்குதல் நடைபெற்றது.

தொண்டமனாறுப்பகுதியில் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் வெளிக்கள நிலையத்தின் சில கட்டிடங்கள் சேதமாயின

ஹெலிகப்டர் ஒன்றும் இப்பகுதியில் பரவலாக 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

நேற்றைய தாக்குதலின் போது எஸ். சிவனேஸ்வரன் (30) என்ற இளைஞர் காலில் படுகாயமடைந்தார் 43.09-07

இப்பத்திரிகை [illegible]ொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தி[illegible]நல்லினங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் [illegible]ன்ன அச்ச[illegible]1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது